**HMOP NO. 173/2023**

**Date 09.04.2026**

**எ.ம.சா.1 இசக்கிராணி**

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

மனுதாரருக்கும், எனக்கும் 08.09.2016 ல் பாம்பு கோவில் சந்தை , கன்னி மூல விநாயகர் கலையரங்கத்தில் வைத்து இந்து முறைப்படி திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். திருமணம் ஆன முதல் நாங்கள் பாம்பு கோவிலில் தான் குடியிருந்து வந்தோம் என்றால் சரிதான். எனக்கு 2017 ம் வருடம் ஏப்ரல் மாதம் பாம்பு கோவிலில் வைத்து தான் வளைகாப்பு நடத்தினார்கள் என்றால் சரிதான். 2012 ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் நாங்கள் தனியாக குடியிருப்பதற்காக ஒரு வீடு கட்ட ஆரம்பித்தோம் என்றால் சரிதான். 2017 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் வளைகாப்பு முடித்து எனது தாயார் வீட்டுக்கு சென்றிருந்தேன். அது முதல் நாளது தேதிவரை நாங்கள் பிரிந்து தான் வாழ்ந்து வருகிறோம். 31.07.2017 ல் எனக்கு இராஜபாளையம் சித்ரா மருத்துவமனையில் வைத்து ஆண் குழந்தை பிறந்தது. அப்போது என்னையும், குழந்தையையும் பார்ப்பதற்காக மனுதாரரும், அவரது குடும்பத்தாரும் வந்தார்கள் என்றால் சரிதான். 05.03.2018 ல் நான் வழக்கறிஞர் மூலம் மனுதாரருகது அறிவிப்பு அனுப்பினேன். மனுதாரர் சேர்ந்து வாழ வேண்டி திருவில்லிபுத்தூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து என்னை அழைத்து விசாரித்து சமாதானம் பேசினார்கள் என்றால் சரிதான். மேற்படி சமாதான பேச்சுவார்த்தையில் பாம்பு கோவில் சந்தையில் குடித்தனம் நடத்த முடியாத காரணத்தால் புளிங்குடியில் தனியாக வீடு பார்த்து குடியிருக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அது போல தனியாக வீடு பார்த்து குடித்தனம் போகவில்லை என்றால் சரிதான். நான் எனது வழக்கறிஞர் மூலம் அறிவிப்பில் மனுதாரருக்கு கல்வித் தகுதி குறைவாக இருப்பதாகவும், அவர் தவறான தகவல்களை சொல்லி என்னை திருமணம் செய்துகொண்டார் என்று சொல்லி தான் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். எனது வயதான தாய், தந்தைக்கு உதவியாக நான் இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. என்னுடன் பிறந்தவர்கள் 2 சகோதரர்கள். எனது 2 சகோதரர்கள் திருமணம் ஆகி வெளிநாட்டில் வேலை பார்த்துக்கொண்டு தனித்தனியாக குடியிருந்து வருகிறார்கள் என்றால் இல்லை ஒரே வீட்டில் தான் குடியிருந்து வருகிறார்கள். நான்

சொல்வது போல் எனது சகோதரர்களின் மனைவிகள் எனது பெற்றோருடன் கூட்டுக்கு குடும்பமாக இருந்து வரவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் தான் எனது பெற்றோருக்கு உதவியாக அவர்களுடன் இருந்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பின்னர் மனுதாரர் இந்த நீதிமன்றத்தில் HMOP 154/2018 என சேர்ந்து வாழ வரக்கோரி அசல் மனு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி மனுவில் நான் ஆஜராகி தாக்கல் செய்த எதிர் உரையில் வழக்கறிஞர் அறிவிப்பில் கூறியது போல மனுதாரரின் மீது குறைகளை கூறி அந்த காரணங்களால் தான் பிரிந்து வாழ்ந்து வருகிறேன் என்று சொல்லியிருந்தேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த எதிர் உரையில் மனுதாரர் மீது பொய்யான குறைகளை கூறி தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரியல்ல. மனுதாரர் அவரது வீட்டில் அடிமை போல் வாழ்ந்து வருவதாகவும், அவரைப்போல் என்னையும் அடிமையாக வாழ வேண்டும் என்று கூறினார் என்று சொல்லியிருந்தேன் என்றால் சரிதான். மனுதாரர் அவரது அண்ணன் குமாரின் இருசக்கர வாகன ஒர்க் ஸாப்பில் வேலை பார்த்து வந்தார் என்றால் சரிதான். HMOP 154/2018 மனுவில் முழு விசாரணைக்குப் பின்னர் சேர்ந்து வாழும்படி சமூகம் நீதிமன்றம் 27.11.2020 ல் உத்தரவிட்டிருந்தது என்றால் சரிதான். அந்த உத்தரவுக்கு பின்னரும் நான் சேர்ந்து வாழாததால் HMOP 95/2021 என விவாகரத்து கோரி சமூகம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கு நிலுவையில் இருந்தபோது MC 2/2022 என வாழ்க்கை பொருளுதவி கோரி மனு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். MC 2/2022 ல் அழைப்பாணை சார்வு செய்யப்பட்ட நிலையில் HMOP 95/2021 ல் நானும், மனுதாரரும் சேர்ந்து வாழ போகிறோம் என்று நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி சொன்னதால் அந்த விவாகரத்து மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் சேர்ந்து வாழ போவதாக மனுதாரரிடம் சொன்னதின்படி MC 2/2022 ஐ வாபஸ் வாங்கி கொள்ளவில்லை என்றால் நான் அவ்வாறு மேற்படி வழக்கை வாபஸ் வாங்குவதாக மனுதாரரிடம் சொல்லவில்லை. 11.10.2022 ல் நான் எனது வழக்கறிஞர் மூலம் வா.சா.ஆ– 11 அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சேர்ந்து வாழாததால் தான் அனுப்பினேன். வா.சா.ஆ– 11 அறிவிப்பில் ஜீவனாம்சம் மட்டும் தான் கேட்டுள்ளேன் என்றாலும், சேர்ந்து வாழ தயாராக இருப்பதாக சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. நான் செப்டம்பர்

2022ம் மாதம் மனுதாரர் மீது புளியங்குடியில் உள்ள அனைத்து காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன். மேற்படி புகாரின் பேரிலான விசாரணையில் நான் சேர்ந்து வாழ முடியாது என்று சொல்லி எனது பண்ட பாத்திரங்களை பெற்றுக்கொண்டு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. நான் செப்டம்பர் 2022ம் மாதம் புளியங்குடியில் உள்ள அனைத்து காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு மற்றும் ரசீது ஆகியவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது பொய் என்றாலும், நான் சொல்வது போல் மனுதாரர் வீட்டில் இருந்து பண்ட பாத்திரங்களை வெளியே எடுத்து போட்டதால் போலிசாரை வைத்து எடுத்துச்சென்றேன் என்று சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. நான் மோசடியாக செப்டம்பர் 2022ம் மாதம் மனுதாரர் குடும்பத்தினர் மீது அபான்டமாக பொய்யான சங்கதிகளை கூறி புகார் மனு கொடுத்தேன் என்ாறல் சரியல்ல. மேற்படி விசாரணையில் நான் சொல்வது பொய் என்பதும், நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்பதால் மனுதாரர் வீட்டில் வைத்து போலிசாரை கொண்டு எனது பண்ட பாத்திரங்களை கௌரவமாக எடுத்துச் சென்றேன் என்றால் சரியல்ல. நான் இந்த புகார் மனுவையும், ரசீதையும் தாக்கல் செய்தால் நான் மனுதாரருடன் சேர்ந்து வாழ மறுத்த விவரமும், நான் பொய்யான சங்கதிகளை கூறி புகார் கொடுத்த விவரமும் தெரியவந்துவிடும் என்பதால் அதனை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பண்ட பாத்திரங்களை எடுத்து சென்ற பின்னர் தான இந்த விவாகரத்து மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். தற்போது வரை ஜீவனாம்சம் நிலுவைத் தொகை வசூலிக்க மனு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரிதான். MC 2/2022 மனுவில் மனுதாரர் எதிர் உரை தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி MC 2/2022 மனுவை திரும்ப விசாரிக்க கோரி தாக்கல் செய்த மனுவில் நீதிமன்றம் எனக்கு செலுத்த வேண்டிய நிலுவை தொகையை செலுத்தக் கூறிதான் ரூ.85000/- மனுதார் செலுத்தி நான் பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். மனுதாரர் தனக்கு முதுகில் நரம்பு அறுவை சிகிச்சை செய்யப்பட்டதால் ஆஜராக முடியாது என நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருப்பதற்கு தாக்கீது தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியாது. நான் MSC தாவரவியல் படித்துள்ளேன். மனுதாரர் 10ம் வகுப்பு படித்துள்ளார்.

நான் எனக்கு திருமணம் ஆன கால முதல் கல்வி தகுதியை காரணம் காட்டியும், மனுதாரர் பார்த்து வரும் வேலையை காரணம் காட்டியும் அவரை அடிக்கடி இழிவாக பேசி வந்தேன் என்றால் சரியல்ல. நான் மனுதாரரை விட்டு 2017ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் பிரிந்து வாழ்ந்து, மனுதாரர் தான் வேண்டுமென்று பிரிந்து வாழ்ந்து வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்பதற்காக திருவில்லிபுத்துார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார், புளியங்குடியில் வீடு பார்த்து அங்கு குடித்தனம் நடத்த என்னை அழைத்திருந்தார், இந்த நீதிமன்றத்தில் சேர்ந்து வாழ கோரி மனு தாக்கல் செய்து அழைத்திருந்தார் என்றாலும், இது எல்லாற்றையும் தட்டிக்கழித்துவிட்டு பெற்றோர்களின் துர்போதனையின்படி அவர்களுக்கு உதவியாக அவர்களுடனே இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர் என்னை சேர்ந்து வாழ அழைக்கவில்லை. நான் மனுதாரருடன் சேர்ந்து வாழ வேண்டி எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த மனுதாரரின் இளமை காலத்தில் சுமார் 9 வருடம் பிரிந்து வாழ்ந்து விட்டு சேர்ந்து வாழ வரவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர் கோரியப்படி விவாகரத்து பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

Sd/-P.Mahindra Varma
Subordinate Judge,
Sankarankovil.